REGD. No. M. 6311 ★ தனி: இதழ் 1 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ 'PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ✶ The Official Organ Of The D.P.F.

சென்னை சர்க்காரின் திட்டம் மாறுகிறது

இரண்டாம் ஐந்தாண்டு திட்டத்தில், சென்னை கல்வி இலாகாவின் பிரரேபணைகளை மத்திய கல்வி இலாகா மாற்றியமைக்க உத்தேசித்துள்ளதாம்.

செலவைக் கணிசமாகக் குறைக்கும் வகையில் பழைய பிரரேபணைகள் மட்டும் அங்கீகரிக்கப்படும் என்று கூறப்படுகிறது. அதையொட்டி, சென்னை அரசாங்கமும் முன்பு தயாரித்திருந்த திட்டப்படியுள்ள செலவைக் குறைக்க நேரிடக்கூடுமாம்!

முன்பு ரூ. 80 கோடி கல்விக்கென திட்டமிட்டிருந்ததாயும், அது, ரூ. 40 கோடியாகக் குறைக்கப்படும் என்றும் தெரிகிறது.

மலர் 3] சென்னை: ஆனி 10உ வெள்ளி (24—6—55) ★ ★ வெளியூர்: ஆனி 11உ, சனி (25—6—55) [இதழ் 9

வேலையின்மைக்கு 8 லட்சம் மீனவர் பலி!

மரவள்ளிக் கிழங்கு பயிரிடுவோருக்கும் பேராபத்து!

பர்மாவின் நேசம் செயல்படும் இலட்சணம்!

நிலைமையை இந்தியப் பேரரசு உணர்ந்திருக்கிறதாம்!

எர்ணுகுளம், ஜூன் 22—

பர்மா அரசாங்கத்தின் புதிய இறக்குமதிக் கொள்கையின் காரணமாக, மூன்று கோடி ரூபாய் மதிப்புடைய இருல் வற்றல் பர்மா நாட்டிற்கு ஏற்றுமதி செய்ய முடியாமல் திருவாங்கூர்—கொச்சியில் தேங்கிக்கிடக்கிறது.

இந்தத் தேக்கத்தின் காரணமாக, ஏறத்தாழ எட்டு இலட்சம் மீனவர்கள் வேலையின்றித் திண்டாடி, பட்டினிக்குப் பலியாகிக்கிடக்கின்றனர்.

இத்தகவலை, இருல் ஏற்றுமதியாளர் சங்கம், இந்தியப் பேரரசின் உணவு மந்திரியிடம், தாங்கள் கொடுத்துள்ள ஒரு மனுவில் விளக்கிக் கூறியுள்ளனர்.

இருல் பிடிப்போரும், பதப்படுத்துவோரும், தங்கள் சங்கச் சார்பில் மேற்படி அமைச்சரிடம் நேரில் தங்கள் அல்லல்களை எடுத்துக் காட்டி, பரிகாரம் தேடுமாறு கோரியுள்ளனர்.

பர்மா அரசாங்கத்தின் இறக்குமதி கொள்கை மாறுதல் காரணமாக, திரு-கொச்சி மீனவர்கள் அனுபவித்துவரும் அவதிகளை இந்தியப் பேரரசு அறிந்திருப்பதாகவும், அது குறித்து பர்மா அரசாங்கத்திடம் பேச்சு நடத்தி வருவதாகவும், அதுவுமன்றி, மேற்படி இருல் வியாபாரத்திற்கு உள்நாட்டில் இனிமேல் சந்தை தேட இருப்பதாகவும், அமைச்சர் பத்திரிகை நிருபர்களிடம் கூறியுள்ளார்.

கல்கத்தாவில் மரவள்ளிக்கிழங்கின் மாவிலிருந்து தயாரிக்கப்படும் ஜவ்வரிசிக்கு, வங்காள அரசாங்கத்தால் விதிக்கப்பட்டுள்ள தடையின் காரணமாக சேலத்தில் மரவள்ளிக் கிழங்குத் தொழிலுக்கு ஆபத்து ஏற்பட்டு இருப்பது போன்றே—திரு-கொச்சியிலும் அத்தொழிலுக்குப் பேராபத்து ஏற்பட்டிருக்கிறது.

அதுபற்றியும் அமைச்சரிடம் முறையிடப்பட்டது.

"கெசவாலைகளில், மரவள்ளி மாவைப் பசையாக உபயோகப்படுத்துவதற்கும், வேறு சவ்வரிசியாகத் தயாரித்து விற்கப்படுவதற்கும் வழிவகைகளைக் கண்டு பிடிப்பதில் யூனியன் அரசாங்கம் உதவி செய்யும்,"

என, அமைச்சர் கூறியுள்ளார்.

"கோதுமை, அரிசிக்கு மட்டுமே விலை வீழ்ச்சியைத் தடுக்க சொந்தத்தில் அரசாங்கமே அவைகளைக் கொள்முதல் செய்ய முடிவு செய்திருப்பதால், அத்தகைய உதவியை மரவள்ளிக் கிழங்கிற்குச் செய்வதற்கில்லை,"

என அமைச்சர் அறிவித்துள்ளார்

மரவள்ளிக் கிழங்கிலிருந்து சவ்வரிசி செய்ய தொழிலதிபர்கள் முன்வந்து திட்டம் தருவார்களானால், அவைகளுக்கான உதவி செய்வது குறித்து யூனியன் அரசாங்கம் ஆலோசிக்கும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

புல்கானின் இந்தியா வருகை

வரும் டிசம்பர் மத்தியிலிருந்து பிப்ரவரி மத்திக்குள்ளாக சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானின், இந்தியாவுக்கு வந்து செல்லத் திட்டமிட்டுக் கொண்டிருப்பதாகத் தெரிகிறது.

பதினைந்து நாட்கள் இந்தியாவில் தங்கக் கூடுமென எதிர்பார்க்கப்படும் அவர், இந்தியக் குடியரசு தினமான ஜனவரி 26-ந் தேதியன்று டெல்லியில் இருக்கக் கூடும் எனத் தெரிகிறது.

புல்கானின் இதர ஆசிய நாடுகளுக்கும், மத்திய கிழக்கு நாடுகளுக்கும் செல்லக்கூடுமாம்.

'எங்களால் கூட்டம் நடத்த முடியவில்லையே'

'தொல்லை தரும் எலிகளை ஒழித்துக்கட்டுங்கள்'

ஜப்பான் அமைச்சர்களின் அங்கலாய்ப்பு!

"அமைதியாக அமைச்சரவைக் கூட்டத்தை நடத்த முடியாத வகையில் எலிகள் தொல்லை தருகிறது. அவைகளின் தொல்லைகளைத் தவிர்க்கத் தீவிரமான நடவடிக்கை எடுத்துக் கொள்ள வேண்டும்."

இவ்வாறு, ஜப்பான் அமைச்சர்களில் சிலர் அங்கலாய்த்துள்ளனர்.

எலிகள் குறுக்கிடு, முக்கியமான வெளிநாட்டு விவகாரம் குறித்தும், உள்நாட்டு நடைமுறை குறித்தும் மந்திரி சபை கூடிப் பேசும்போதுதான் மிகுதியாக இருக்கிறது எனக் கூறப்பட்டிருக்கிறது.

அதுவுமன்றி, கொசுவையும், ஈயையும் தொலைத்துக்கட்டுவது குறித்து அண்மையில் ஜப்பான் அமைச்சரவை ஆலோசிக்கக் கூடிய பொழுதுதான், எலிகளின் அட்டகாசம் அதிகரித்திருந்ததாம்!

பார்லிமெண்டு கட்டிடத்தில் இருக்கும் எலிகளை நிர்மூலமாக்கி, அவற்றின் தொல்லையிலிருந்து அமைச்சர்களைக் காத்து இரட்சிப்பதாக, ஜப்பான் சபை செயலாளர் அமைச்சர்களுக்கு வாக்குறுதி அளித்துள்ளார்!

மாலடோவ் சுட்டு வீழ்த்தப்படுவார் என அச்சுறுத்தல்!

சான்பிரான்சிஸ்கோ, ஜூன் 23—

"சோவியத் ரஷ்ய வெளிநாட்டு மந்திரி மாலடோவ் சுட்டு வீழ்த்தப்படுவார்,"

என்ற அச்சுறுத்தல், டெலிபோன் மூலம் செய்யப்பட்டதென ஐ. நா. சபை அதிகாரிகள் தெரிவித்திருக்கின்றனராம்.

இந்த தகவலை ஐ. நா. பாதுகாப்புத் தலைமை அதிகாரிகள் சான்பிரான்சிஸ்கோ போலீசாருக்கு அனுப்பியதும், அவர்கள், துரிதமான பாதுகாப்பு ஏற்பாடுகளைச் செய்திருக்கின்றனர்.

ஐ. நா. சபையின் 10-வது ஆண்டு விழா நடைபெற்று வரும் மாளிகையைச் சுற்றிலும் போலீஸ் பாதுகாப்புச் செய்யப்பட்டிருக்கிறதாம்.

"மாலடோவ், அன்றைய விழா நிகழ்ச்சிகளில் பங்கு பெற மாட்டார்" எனத் தெரிவிக்கப்பட்டதும், பாதுகாப்புகள் கலைக்கப்பட்டனவாம்!

தமிழ் கலைச் சொற்கள்

இலங்கை சர்க்கார் தீவிரம்?

கலை, விஞ்ஞானம், இலக்கியம் போன்ற பல துறைகளிலும் பயன்படுத்துவதற்கு, தமிழ் மொழியிலும், சிங்கள மொழியிலும் பொருத்தமான கலைச் சொற்களைத் தேர்ந்தெடுத்து தொகுப்பதில் இலங்கை சர்க்கார் தற்போது ஈடுபட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

தங்கள் போக்கு மாருதாம்!

எப்பொழுதும்போல்தான் இடர்படுவார்களாம்!

இந்திய கம்யூனிஸ்டுகளின் முடிவு?

புதுடில்லி, ஜூன் 23—

ஆந்திர தேர்தலில் தங்களுக்கு ஏற்பட்ட படுதோல்வியை ஆராய்ந்து, இனிமேல் செயல்முறைக்குக் கொண்டுவர வேண்டிய நடைமுறையையும் வகுக்குமாறு, இந்திய கம்யூனிஸ்டு கட்சி குழு ஒன்றை நியமித்திருந்தது.

தனக்கிட்ட கட்டளைப்படி. அக்குழுவும் மேற்கொள்ளத் தக்க நடைமுறை திட்டத்தைத் தீட்டிக் கொடுத்தது. அதை அடிப்படையாக வைத்து, விவாதித்து முடிவு காண இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் மத்தியக் குழு கூடி விவாதித்து வருகிறது.

கடந்த பத்து தினங்களாக மத்தியக் குழு கூடி விவாதித்து வருகிறது; வருகிற திங்கட்கிழமையோடு விவாதம் முடிவுறுகிறது.

இதுவரை கம்யூனிஸ்டு கட்சி அனுசரித்து வந்த நடைமுறையில் குறிப்பிடத் தகுந்த மாறுதல் செய்யப்படமாட்டாது என்றும், எப்பொழுதும்போல் தான் அக்கட்சியின் போக்கு இருந்துவரும் என்றும் நம்பிக்கையாகத் தெரியவருகிறது.

அரசாங்கத்துடன் நிரந்தரமாக ஒத்துழைக்கும் போக்கு இருக்காது என்றும், காங்கிரசிற்கு எதிர்க் கட்சியாகத்தான் இயங்கி வரும் என்றும், உள்நாட்டு விவகாரத்திலோ வெளிநாட்டுக் கொள்கையிலோ இந்திய அரசாங்கம் ஒரு நல்ல நடைமுறையை மேற்கொள்ளுமானல் இப்பொழுது ஒத்துழைப்புத் தந்து வருவதுபோலவே, அப்பொழுதும் ஒத்துழைப்புத் தரப்படும் என்றும் மத்தியக் குழு உறுப்பினர் சிலர் மூலம் தெரிய வந்திருக்கிறது.

ஆச்சாரியாருக்கு அடிமேல் அடி!

சென்னையில் பி. சி. ஜி. இயக்கம் தீவிரமாகும்

சென்னை, ஜூலை 23—

சென்னை மாநிலத்தில் பி.சி.ஜி ஊசி போடும் இயக்கத்தைத் தீவிரப்படுத்துவதற்காக, இரண்டாவது ஐந்தாண்டு நகல் திட்டத்தில் வழி செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

இந்தத் திட்டம் குறித்து சர்க்கார் இப்போது பரிசீலனை செய்து வருகிறார்களாம்.

இரண்டாம் திட்ட காலத்தில் ஒரு கோடி பேருக்கு ஊசி போடப்படும் என்றும், இதற்கு ரூ. 10 முதல் 14 லட்சம் வரை செலவாகுமென மதிப்பிடப்பட்டுள்ளதாகவும் சர்க்கார் வட்டாரத் தகவல்களிலிருந்து தெரியவருகிறது.

மைசூர் ராஜப்பிரமுகர் ஆப்பிரிக்கா பயணம்

மைசூர் ராஜப்பிரமுகர் இன்று காலை பம்பாய்க்குப் பயணமாகியிருக்கிறார். அவர் அங்கிருந்து கெய்ரோ சென்று, ஆப்பிரிக்க காடுகளில் ஆறுவாரம் சுற்றுப் பயணம் செய்வார் என்று அறிவிக்கப்படுகிறது.

அவர் நாடு திரும்பும் வரையில் அவரது தாயார் அப்பதவியை வகித்து வருவார்.

அர்ஜெண்டைனு மந்திரிகள் ராஜினமா

மாண்டிவிடியோ, ஜூன் 22—

அர்ஜெண்டைனு அமைச்சர்கள் அனைவரும் இராஜினமா செய்துவிட்டதாக குடியரசுத் தலைவர் பெரான் தெரிவித்திருக்கிறாராம்.

விரைவில் அவர்களின் இராஜினமா பற்றிக் கவனிப்பதாகவும், தான் சிறைவைக்கப்பட்டிருப்பதாக உலவிவரும் வதந்திகளை நம்பவேண்டாமென்றும் அவர் கூறியிருக்கிறார்.

கள்ளக் குடியேற்றக்காரர்கள் யார்?

இந்தியாவை விளக்கம் கேட்கிறது இலங்கை!

கடந்த 1954-ல் ஏற்பட்ட இந்தியா—இலங்கை ஒப்பந்தத்தில், கள்ளக் குடியேற்றக்காரர் பற்றிய விதிகளுக்கு வியாக்கியானம் கோரி, இலங்கை சர்க்கார், இந்தியாவுக்கு இரண்டொரு நாட்களில் குறிப்பொன்று அனுப்புவர் என்று அதிகாரி ஒருவர் கூறியிருக்கிறாராம்.

இந்தியா அந்தக் குறிப்புக்கு அனுப்பும் பதிலைப் பொறுத்து, ஒப்பந்தம் தொடர்ந்து அமுல் செய்வது இருக்கும் என்றும் அவர் கூறியிருக்கிறார்.

காலம் மாறுகிறது!

திருச்சி, ஜூன் 23—

"திருமணங்களுக்கு பெற்றோர்கள் ஏற்பாடு செய்கையில் ஜோசியரைக் கலந்தாலோசிப்பதற்குப் பதில் குடும்ப வைத்தியரைக் கலந்தாலோசிக்கும் காலம் வெகு சீக்கிரம் வரும்,"

என்று சென்னை ஸ்டான்லி வைத்தியக் கல்லூரியைச் சேர்ந்த டாக்டர் எ. அனந்தநாராயண அய்யர் திருச்சி வைத்திய சங்க கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
சென்னை 24—6—'55 வெள்ளி

'இந்து'வுக்கு ஏன் கவலை இல்லை?

தென் ஆப்பிரிக்க வெள்ளையர்களின் நிறவெறியைக் காரசாரமாகக் கண்டிக்கும் 'இந்து' இதழ், இங்கு பிறப்பினுல் உயர்வு—தாழ்வு பேசும் பித்தலாட்டக்காரர்களின் கொடுமதியைக் கண்டிப்பது கிடையாது. அதற்கு மாருக ஜாதி ஆணவத்தைக் கண்டிக்கும் சமத்துவவாதிகளை, சாடையாக சில சந்தர்ப்பத்திலும், வெளிப்படையாக அனவரதமும், இழித்துப் பழித்து ஏசவும் செய்கிறது!

சனுதனக் கோட்பாட்டிற்கு எதிராக ஆணித்தரமான காரண காரியங்களைக் காட்டி, பகுத்தறிவாளர்கள் பேசும் பேச்சுகளை இருட்டடிப்புச் செய்வதில், 'இந்து' இதழுடன் போட்டியிட்டு வெற்றி பெறும் நிலையில் வேறு ஆங்கில ஏடுகள் இல்லவே இல்லை! சமரச கோரிக்கையினரின் பேச்சு சிற்சில சமயங்களில் 'இந்து' இதழில் இடம் பெறுவதுண்டு. ஆனுல், பேச்சின் சாரம் மறைக்கப்பட்டு, கூறிய உயர் கருத்துக்கள் சிதைக்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்ட அச்செய்தி இருந்திடக் காணலாம்.

ஆயிரமாயிரம் கல்லுக்கு அப்பால், கடலால் பிரிக்கப்பட்டுக் கிடக்கும் தொலைவில் உள்ள நாட்டில் கோரத் தாண்டவம் புரியும் நிறபேதக் கொடுமையைக் குறித்துக் கனல் கக்கும் 'இந்து' ஏட்டிற்கு, தன் கண்ணுக்கு நேராக நாள் தவருது நடைபெற்றுவரும் — ஜாதிய உயர்வு-தாழ்வால் பெரும்பான்மையினரான மக்கள் பட்டுவரும் அவதியும், அனுபவித்துவரும் அல்லல்களும் அதன் கண்களிலும் கருத்திலும் உறுத்தவில்லை என எவர்தான் கூறுவர்? அவ்வளவு பெரும் பொய்யைப் புகல, எவருக்குத்தான் நெஞ்சுத் துணிவு இருக்க முடியும்?

துாரத்து நிற பேதத்தைக் கண்டித்து, மக்களாட்சி முறைக்கு உயிர் தானம் செய்து வரும் 'இந்து' ஏடு, அருகாமையில் தினம் தினம் நிகழ்ந்தவண்ணம் இருக்கும் நிற பேதத்திலும் கொடியதும், வன்மை மிக்கதுமான ஜாதிய பேதா பேதத்தைக் கண்டித்து, மக்களாட்சி முறையை இந்த மண்ணில் வேர்விடச் செய்யக் கூடாதா, என, நல்லறிவு படைத்த எவருக்குமே கேட்கத்தான் தோன்றும். அப்படி கேட்டு விடுவார்களோ என்றைக்காவது என்ற அச்சத்தால்தானே 'இந்து' ஏடு, அடுத்தடுத்து சனுதனத்தின் சிறப்பையும், வர்ணுஸ்ரமத்தின் வளமையையும், திருக்கோயில்களின் மகிமையையும், தீர்த்தங்களின் புனிதத்தையும், அகோபில மடத்தார் ஆணையையும், ஜெகத்குரு சங்கராச்சாரியின் அருமை பெருமையையும், விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக்காட்டிய வண்ணம் இருந்துவருகிறது? இவைகளை முழுதும் படித்து முடிப்பதற்கே, நமது படித்தவர்களுக்கு அவகாசம் கிடைக்காதபொழுது, 'இந்து' ஏடு தரும் நிறபேதக் கொடுமை குறிப்பைநோக்குவதெங்கே?—வேறு உருவில் இங்கு உலாவிவரும் அதனிலும் மிகுதியானக் கொடுமையை ஏன் அந்த இதழ் கண்டிக்காமல் வாய்மூடிக்கிடக்கிறது எனச் சிந்திப்பதெங்கே? சிந்தித்துப் பார்த்த பிறகல்லவா, அந்த ஏட்டைநோக்கி கேள்விக் கணைகளைப் போடுவது, நமது படித்தவர்களுக்கு சாத்தியப்படும்!

அதற்குள்ள இனப்பற்று, அதற்கு அம்புருத் தூணியாக இருக்கும் சனுதனக் கோட்பாட்டைச் சரிய விடாமல் பார்த்துக்கொள்ள 'இந்து'வுக்கு ஊக்கமும் ஆக்கமும் கொடுத்துக் கொண்டு இருக்கிறது. இந்த சூட்சுமத்தைத் தெரிந்துகொண்டவர்கள், அந்த ஏடு, வெள்ளையர் நிறவெறியைக் கண்டிப்பதற்கும் அதிக முக்கியத்துவம் கொடுப்பதில்லை; ஜாதி அக்கிரமத்தைக் கண்டிக்காததற்கும் அதிகமாகக் கவல்வதில்லை!

ஆனுல் தென்னுட்டின் தொழில் வளத்திலும், திராவிடர்களின் —இல்லை — தமிழர்களின் நல்வாழ்விலும், இந்தியப் பேரரசு, காட்டப்பட வேண்டிய அளவு அக்கறை காட்டத் தவறுவதையும், அதுவும் வேண்டுமென்றே திட்டமிட்டுத் தவறிழைப்பதையும், 'இந்து' கேட்காமல் ஏன் இருக்க வேண்டும்?

தென்னுட்டிற்கும், தமிழ் மக்களுக்கும் இந்தியப் பேரரசு இழைக்கும் கொடுமை—தீமை, ஒரு முறையல்ல — இரண்டு முறையல்ல, ஒரு துறையில் அல்ல — இரண்டு துறையில் அல்ல, பலமுறை—பல துறைகளில் என்றல்லவா பட்டியல், 'அனுமார் வால்' போல் நீண்டுகொண்டே போகிறது? தமிழ் நாட்டார் நல்வாழ்வு பெற, தமிழ் மக்கள் வறுமைப் பிணியிலிருந்து மீள, இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனைப் போக்கை, 'இந்து' கேட்க ஏன் முன்வரக் கூடாது? அதட்டிக் கேட்க வேண்டாம்; கர்ண கடூரமாகவும்கேட்கவேண்டாம்; தனது ஜென்மக் கூறுபடி, பட்டும் படாமலுமாவது 'இந்து' கேட்க மனங்கொள்ளாதது ஏன்?

வயிறு பிழைக்க பர்மா சென்ற தமிழர்கள், சொந்த மக்களைக்காண சொந்த நாடு திரும்பியுள்ளனர். அவர்களில் பல ஆண்டுக் காலமாக ஊர் திரும்பி அறியாதவர்களும் இருக்கிருர்கள்; ஓராண்டுக் காலமாக வராதவர்களும் இருக்கிருர்கள்.

அவர்கள் அனைவரும் காலாகாலத்தில் பர்மா திரும்ப வேண்டிய கட்டாயத்தில் இருப்பவர்கள். அவர்கள் பர்மா திரும்ப இருந்த ஒரே கப்பல் வசதியை, வடநாட்டுக் கம்பெனியான சிந்தியா கப்பற் கம்பெனி பறித்துக்கொண்டு விட்டது.

பர்மா செல்ல சென்னையில் காத்துக் கிடக்கும் தமிழ் நாட்டவர்களைக் கண் பிசையவைத்திருக்கிறது, தனது கப்பல் போக்குவரத்தை நிறுத்திவிட்டதின் மூலம் சிந்தியா கம்பெனி!

தமிழர்கள்தானே தவிக்கட்டும் — தரை மட்டமாகட்டும் என்ற போக்கில், இந்தியப் பேரரசும் ஏனோதானோ என்று இருந்து வருகிறது!

'இந்து' ஏடு, பெரிய ஆங்கில ஏடு! எழுதக் கூடாதா, சிந்தியா கம்பெனியின் நடத்தையில் பொதிந்திருக்கும் கழுத்தறுப்புத் தன்மையை! இந்தியப் பேரரசிடம் 'இந்து' நீதி கோரக்கூடாதா நீதி?

அகதிகளுக்கு, இப்படி ஒரு மனமறிந்த கேட்டினை, சிந்தியா கம்பெனி செய்திருக்குமானுல்,—செய்யத் துணிவும்-கருத்தும் இருக்காது—, எண்ணத்தொலையாதத் தாக்குதல் அம்புகள், இதற்குள், இந்தியப் பேரரசை நோக்கிப் பறந்திருக்குமே? வடநாட்டு ஏடுகள், இதற்குள்ளாகக் கண்டனக் கணை, சரமாரியாக இந்தியப் பேரரசின் மீது பொழிந்திருக்குமே!

'இந்து'விற்கு இது தெரியாதா? தமிழர்களுக்காக நீதி கோருவதை, 'இந்து' தனது கடமை அல்ல எனக் கொண்டிருக்கிறதா?

பஞ்சாபிலும், இராஜஸ்தானிலும், சென்னை வியாபாரிகளால் கொள்முதல் செய்யப்பட்ட பருப்பு வகைகளும், நவதானியங்களும், சென்னைக்குக் கொண்டு வருவதற்கான 'வாகன்' வசதி கிடைக்காததால், அங்கேயே தேங்கிக் கிடக்கின்றன. அதன் விளைவாக, அவ்வுணவுப் பொருட்கள் கெடுகின்றன-பழுதாகின்றன!

இங்கும் அப்பொருட்கள் குறைவாக இருக்கின்ற காரணத்தால், அதிகவிலை கொடுத்து அப்பொருட்களை வாங்கவேண்டியிருப்பதால், தமிழ் மக்கள் துயரடைகின்றனர்!

இராஜஸ்தானிலும், பஞ்சாபிலும் கொள்முதல் செய்யப்பட்ட உணவுப் பண்டங்கள், அங்கேயே தேங்கிக்கிடந்து கெட்டழிவதால், தமிழ் நாட்டு வர்த்தகர்கள் நஷ்டமடைகின்றனர்.

இந்த அக்கிரமத்தைத் துடைக்க, இதற்குள்ளாக 'இந்து' கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு கிளம்பி இருக்க வேண்டும்! கிளம்பவில்லையே, ஏன்?

கல்கத்தாவிற்கும், பம்பாய்க்கும் கோரும் அளவு 'வாகன்' வசதிகளை டில்லி அரசாங்கம் உடனுக்குடன் செய்து தருகிறதாம்! ஆனுல், சென்னை வியாபாரிகளின் கோரிக்கையை நிறைவேற்றித் தருவதில் மட்டும் இந்தியப் பேரரசு 'மாற்ருந்தாய்' மனப்போக்கைக் கொண்டிருக்கிறதாம்!

இது, நமது கூற்று அல்ல! சென்னை வியாபார சங்கம் இப்படி கூறி, செய்வதறியாது திகைக்கிறது!

இந்த சோகக் கதையைச் செய்தியாகத் தந்துள்ள 'இந்து' ஏட்டிற்கு, இதற்காக, இந்தியப் பேரரசிடம் நியாயம் கோர—வாதிட வேண்டுமே என்ற நல்லறிவு உதயமாகக் காணேம்! ஏன் உதயமாகவில்லை?

மிளகாய் வற்றல் விவகாரம், வேதனை தரும் துன்பக் கதையாகும்!

இத்துறையில் தமிழ் நாட்டாருக்குக் கேடு செய்து, அதனுல் வடநாட்டினரைக் கொழுக்கப் பார்த்துக்கொள்ளும் இந்தியப் பேரரசின் ஓரவஞ்சனையை, சென்னை வியாபார சங்கம் வெட்ட வெளிச்சமாக்கி இருக்கிறது!

இந்த சோகக் கதையையும் செய்தியாக 'இந்து'தான் கொடுத்திருக்கிறது!

'என் மக்களுக்கு; என் நாட்டவருக்கு ஏன் இப்படி தீங்கிழைக்கிறீர்கள்?' என, 'இந்து' கேட்டிருக்க வேண்டும். இதைத்தான், நாமல்ல—'இந்து' இதழிடம் சென்னை வியாபார சங்கத்தினர் எதிர்பார்த்திருக்கக்கூடும்.

ஆனுல், அவர்கள் அறிவார்களா, 'இந்து' ஏட்டிற்குள்ள பொறுப்பும் கடமையும், வேறு போக்கிலும் நோக்கிலும் புதைந்துகிடக்கும் ஒன்றுகுமே, என்பதை!

கல்லிடைக் குறிச்சி வாசிகளா, லால்குடி வாழ்பவர்களா தமிழ் நாட்டு வியாபாரிகள், 'இந்து' ஏடு, இந்தியப் பேரரசிடம் நியாயம் கோருவதற்கும், கோபித்துக் கொள்வதற்கும்?

தீண்டாமை தண்டனை சட்டத்தை விளம்பரப்படுத்த, சென்னை அரசாங்கம் வெளியிட்ட சுவரொட்டியில் தீட்டப்பட்டிருந்த ஓவியத்தை கிழித்தவர்களா, இந்தத் தமிழ் வியாபாரிகள்; அவர்களுக்காக, 'இந்து' ஏடு பரிந்து பேச—நீதிகோர—இந்தியப் பேரரசை எதிர்க்க?

'இந்து'வே, நீ வாழி! நீடூழி வாழி!

உரிமைக் கிளர்ச்சி கண்டு பண்டித பந்த் நடுக்கம்!

இந்தியர் - சீக்கியர் 'நல்லுறவு' கசந்துவிடுமாம்

புதுடில்லி, ஜூன் 22—

"சீக்கியர்கள் இந்திய நாட்டின் பிரிக்க முடியாத பகுதியினர்; இந்தியாவில் எல்லாக் குடிமக்களுக்கும் சாதி, சமய, குல, வகுப்பு வேறுபாடின்றி சம உரிமைகள் உண்டு;

"எந்த ஒரு வகுப்பாருக்கும் ஏதேனும் நியாயமான குறைபாடுகளோ அல்லது அநீதியோ இழைக்கப்பட்டிருப்பதாக உணர்ந்தால் அவர்களுடைய குறைகளை—அவர்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளைப்போக்க இந்திய அரசாங்கம் மிக ஆர்வங்கொண்டிருக்கிறது;

"சீக்கிய சமூகத்தவர் எப்போதும் மிக ஒழுங்கானவர்கள்; சட்டத்திற்குக் கட்டுப்பட்டு நடப்பவர்கள்; அவர்கள், அகாலிதளத்தவர் இப்போது நடத்தும் கிளர்ச்சிபற்றி கவலைப்படவில்லை; சீக்கியர்களிலேயே பெரும் பகுதியினர் அகாலி கிளர்ச்சியை எதிர்க்கிருர்கள்,"

என்று மத்திய உள்நாட்டிலாகா மந்திரி பண்டித கோவிந்த வல்லப பந்த் குறிப்பிட்டிருக்கிருராம்.

"சட்டத்தை மீறுபவர் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்காமல் விடுவது, சட்டத்தையே கேலி செய்வதாகும்; அதனுல் தான் பஞ்சாப் சர்க்காருக்கு இப்போது அவர்கள் மேற்கொண்டு வரும் நடவடிக்கைகளைத் தவிர வேறு வழியில்லை.

"ஏதேனும் சட்டங்கள், உத்தரவுகள் ஆகியவை, தகுதியுடையவைதாஞ என்பதில் எவருக்கும் சந்தேகமிருந்தால், அவர்கள், நீதி மன்றங்களை நோக்கிச் செல்லலாம்; அதை விட்டுவிட்டு, மக்கள், சட்டங்களை மீறுவது நாட்டில் குழப்பத்தைத் தான் உண்டுபண்ணும்,"

என்றும் பண்டித பந்த் குறிப்பிட்டிருக்கிருர்.

"அகாலிதளத்தவர் நடத்தும் கிளர்ச்சியின் விளைவாக இந்துக்களுக்கும் — சீக்கியர்களுக்குமிடையே இருந்து வருகிற நேச உறவு கசந்து போய்விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டும்,"

என்றும் பண்டித பந்த் கூறியிருக்கிருர்.

★

"அகாலி தளத்தவரின் உறுதி தளராது"

கைது செய்யப்பட்ட பூபேந்திர சிங்மான் விளக்கம்

அகாலிதள 'சர்வாதிகாரி'யான பூபேந்திர சிங்மான் என்பவர், பாட்டியாலாவில், ஒரு ஓட்டலில், பெப்சு போலீசாரால் கைது செய்யப்பட்டார்.

144 தடையுத்தரவை மீறியதற்காக அவரைக் கைது செய்யுமாறு, பஞ்சாப் சர்க்கார் 'வாரண்ட்' பிறப்பித்திருந்தனர்; அதன்பேரிலேயே அவர் கைது செய்யப்பட்டிருக்கிருர்.

"அகாலிதள கிளர்ச்சியைத் தொடர்ந்து நடத்தத் எனக்குப் பிறகு தலைமை தாங்கவேண்டிய வரை நான் இன்னும் நியமிக்கவில்லை," என்று பூபேந்திர சிங் அவசர அவசரமாகக் கூறியிருக்கிருர்.

"நாங்கள் கிளர்ச்சியின் மூலம் எந்தவித சலுகையையும் எதிர்பார்க்கவில்லை; எனவே, அரசாங்கத்துடன் சமரசம் என்ற பேச்சே எழவில்லை," என்றும் அவர் தெரிவித்திருக்கிருர்.

"நாங்கள் கிளர்ச்சியிலீடுபட்டிருப்பதற்குக் காரணம், எங்கள் கோரிக்கைக்காக எழுப்பும் உரிமைக் குரலுக்கு சர்க்கார் விதித்திருக்கும் தடைக்கு எங்கள் எதிர்ப்பைத் தெரிவிக்கத்தான்; எனவே, அகாலி தளத்தவர், தடை நீங்கும் வரை போராட உறுதி பூண்டிருக்கின்றனர்," என்றும் கூறியிருக்கிருர்.

உத்திர பிரதேசத்தில் பிச்சைக்காரர் ஒழிப்பு!

நகல் மசோதா தயாராகிவிட்டது

உ. பி. அரசாங்கம் தயாரித்துள்ள, பிச்சை எடுப்பதை தடுக்கும் நகல் மசோதாவை உ. பி. சட்டசபையின் சமூக நல நிரந்தரக் குழு அங்கீகரித்துள்ளதாகத் தெரியவருகிறது.

மாநிலத்தில் பிச்சை எடுத்தலை ஒழிக்கவும், எவரும் பிச்சை என்பதை தங்கள் வாழ்க்கை வழியாகக் கொள்வதை தடுக்கவும், மசோதா சட்டமாக்கப்படவிருக்கிறது.

மசோதா நிறைவேறியானதும், மாநிலத்தில் உள்ள பிச்சைக்காரர்களுக்கு புனர்வாழ்வளிப்பதற்கான வழிவகைகளைக் காண, ஒரு மத்திய நிவாரணக் குழு அமைப்பதையும், மசோதா, ஒரு அங்கமாகக்கொண்டுள்ளது.

ரூ. 80 கோடி செலவில் 72 கப்பல்கள்

இந்தியப் பேரரசு திட்டம்!

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ. 80 கோடி செலவில் 4½ லட்சம் டன் எடையுள்ள 72 கப்பல்களைக் கட்டுவதற்கான திட்டமொன்று சேர்த்துக்கொள்ளப்படும் என்று தெரியவருகிறது.

இதற்கான மொத்தத் தொகை ரூ. 80 கோடியில் தனியார் துறை மூலதனமாக ரூ. 10 கோடி முதலீடு செய்யப்படுமென்றும், பாக்கித் தொகை முழுவதும் சர்க்கார் முதலீடாக இருக்குமென்றும் தெரிகிறது.

'பேச்சளவைக் கைவிட்டு செயல் முறையில் இறங்கவேண்டும்'

வல்லரசுகளுக்கு 7-அம்ச திட்டம்

வல்லரசுகளிடையே 'கெடுபிடிப் போரை' நிறுத்த 7 அம்சங்கள் அடங்கிய திட்டமொன்றை சோவியத் அயல் நாட்டமைச்சர் மாலடோவ், ஐ நா. சபைக் கூட்டத்தில் கொண்டுவந்தார்.

"பேச்சளவில் இருந்தவரும் உலக ராஜ தந்திரிகளனைவரும், அதனைக் கைவிட்டு, செயல் முறையில் இறங்கவேண்டும்," என்று அவர் கேட்டுக்கொண்டார்.

அவர் தெரிவித்த அந்த ஏழு அம்சத் திட்ட விவரம் பின்வருமாறு :—

"உலக நாடுகள் அனைத்திலும் போர் நிறுத்தப் பிரச்சாரம் செய்யவேண்டும்.

"அந்நிய நாடுகளில் தங்கள் அதிகாரத்தின் கீழுள்ள இராணுவ தளங்களை அகற்ற வல்லரசுகள் உடனடியாக ஒப்பந்தம் செய்து கொள்ளவேண்டும் ;

"அணுசக்தியை ஆக்க வேலைகளுக்கு மட்டும் பயன்படுத்துவதுடன், பின்தங்கிக் கிடக்கிற நாடுகளுக்கு உதவியும் அளிக்க வேண்டும் ;

"ஜெர்மனியிலிருந்து தங்கள் தங்கள் படைகளைத் திரும்பிப் பெற்றுக்கொள்வது சம்மந்தமாக நான்கு வல்லரசுகளிடையேயும் ஒருஉடன்பாடு ஏற்படுத்தவேண்டும் ;

"உலகை எதிர்நோக்கியிருக்கின்ற முக்கியமான கீழ்க்கோடிப் பிரச்சினைகளைத் தீர்க்க வேண்டும் ;

"அகில உலக பொருளாதார ஒத்துழைப்பிற்கும் வர்த்தகத்திற்கும் உள்ள தடைகளை நீக்க வேண்டும் ;

"நல்லெண்ண தூதுக் குழுக்களை பரிமாறிக்கொள்வதுடன், உல்லாசப் பிரயாண வசதிகளை அதிகரிப்பதின் மூலம் அகில உலக கலாச்சார உறவுகளை விரிவுபடுத்தவேண்டும்."

மேலும் அவர் பார்மோசா பற்றிப் பேசுகையில்,

"வெகு விரைவிலேயே பார்மோசா பற்றிய பிரச்சினையைத் தீர்ப்பதற்கான 'தக்க நடவடிக்கை' எடுக்கவேண்டியது ஐ. நா. சபையின் முக்கிய பொறுப்பாகும்" என்றும் சுட்டிக்காட்டினார்.

சமுதாய நலத் திட்டத்தைச் சேர்ந்த நகர்ப்புற திட்டப் பிரிவொன்றுக்கு சுமார் ரூ. 11 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இதில், ரூ 4·5 லட்சம், டாலர் நாணயத்தில் செலவாகிறது.

1½ கோடி பேருக்கு பி. சி. ஜி. ஊசி

எவருக்கும் க்ஷயரோக நோய் பிடிக்கவில்லை என அறிவிப்பு

"சென்னை—கிண்டியில் செய்யப்படுகின்ற மருந்தைக் கொண்டு, பி. சி. ஜி. ஊசி போடப்பட்ட 1 கோடி 50 லட்சம் பேர்களில் இதுவரையிலும் எவருக்குமே க்ஷயரோக நோய் பீடித்துள்ளதாகத் தெரியவில்லை,"

என்று, கிண்டி பி. சி. ஜி. மருந்து உற்பத்தி நிலைய டைரெக்டர் டாக்டர் கே. எஸ். இரங்கநாதன் கூறியிருக்கிறார்.

இந்தியா மட்டுமல்லாமல், தென்கிழக்கு ஆசிய நாடுகளான பர்மா, தாய்லாந்து, இலங்கை, மலேயா ஆகிய நாடுகள் ஒவ்வொன்றிலும் 10 லட்சம் பேர்களுக்கு இந்த ஊசி போடப்பட்டிருக்கிறது என்றும், அங்கெல்லாம்கூட இதே பலன் கிடைக்கப் பெற்றிருக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த பி. சி. ஜி ஊசி மருந்து, காசநோய்க் கிருமிகளால் இந்நோய் ஏற்படாமல் தப்பித்துக்கொள்ள உதவும் இயற்கையான முறையைத் தழுவியதாம் !

க்ஷயநோய்க் கிருமிகளால் இந்த நோய் ஏற்படக்கூடிய காலத்தில் இந்த ஊசி மருந்து குத்திக்கொள்பவர்கள் அந்த நோய் உண்டாகாமல் தடுத்துக்கொள்வதற்கான சக்தியைப் பெறுவதே இந்த ஊசி போடுவதின் நோக்கம் என்றும், ஆயினும் இந்த ஊசி குத்திக்கொள்வதால் சிறிது கால அளவு வரையிலும்தான் மேற்படி நோய் ஏற்படாமல் இருக்கும் என்பதும் உண்மைதான் என்றும் அவர் அறிவித்திருக்கிறார்.

பராபோல் திட்டம்

நிர்வாக மாற்றம் குறித்து யோசனை

சென்னை, ஜூன் 21—

பராபோல் மின்சார நீர்ப்பாசனத் திட்டத்தின் எதிர்கால நிர்வாகம் ஆகியவற்றை சென்னை அரசாங்கத்திடம் ஒப்படைத்து விடுவது பற்றிய ஒரு யோசனை குறித்து கூர்ஜர மாநில அரசாங்கத்தின் கருத்தினை மத்திய அரசாங்கம் கேட்டிருப்பதாகத் தெரிய வருகிறது.

இந்த யோசனைக்குக் காரணம், கூர்ஜர மாநிலத்தில் தேவையான தொழிற் கல்வி பெற்றோர் போன்ற மற்றும் வசதிகள் கிடைக்க இடமில்லை என்பதினாலேயே உருவானதாகக் கூறப்படுகிறது. மேலும் இந்த திட்டத்தினால் உற்பத்தி செய்யக்கூடிய மின்சாரம் முழுவதையும் கூர்ஜரம் உபயோகித்துக்கொள்ள முடியாது. எஞ்சிய மின்சாரத்தை உபயோகித்துக்கொள்ள சென்னையைத்தான் எதிர்பார்க்க வேண்டியிருக்கும்.

ஆனால், அம்மாதிரி இன்னொரு மாநிலத்தில் உள்ள திட்டத்தினை தாங்கள் நிர்வகிக்க முடியாதென்றும், ஏனெனில் தாங்களே குண்டா திட்டம் போன்ற பெரியதொரு திட்டத்தை மேற்கொள்ள விருப்பதாயும், சென்னை அரசாங்கத்தினர் கருத்தறிவித்திருக்கின்றனர் என்பதும் குறிப்பிடத் தகுந்ததாகும்.

தி. மு. கழக மாநில மாநாட்டு நிதி

★

திருச்சியில் நடைபெறப்போகும் மாநில மாநாட்டு நிதிக்கு நன்கொடை, வரவேற்புக் கட்டணத் தொகை அனுப்பி வைக்கும் தோழர்கள், காஞ்சிபுரத்திற்கும், சென்னைக்கும் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைக்காமல், "பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன், தலைமை தி. மு. கழகம், 'அறிவகம்' இராயபுரம், சென்னை-13" —என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு வேண்டுகின்றோம்.

சென்னை-13 } பொறுப்பாளர்,
7—6—'55. } 'நம் நாடு.'

டாக்டர் அ. சிதம்பரனாரின் மேனாட்டு அனுபவங்கள்

"இங்கிலாந்தில் நாம் முதன் முதலாகக் காணக்கூடியது துப்புரவேயாகும் ; அவர்களுடைய வாழ்க்கை ஒரு கடிகாரத்தைப் போல் நடைபெறுகின்றது. அவர்கள் நேர்மையும் ஒழுக்கமும் உடையவர்களாகக் காணப்படுகின்றனர்.

"அங்குள்ள நூல் நிலைய அமைப்பினைப் பார்த்தாலே அவற்றை விட்டுவர மனமே இராது. யார்யாருக்கு என்னென்ன நூல்கள் தேவையோ அவையெல்லாம் அந்த நூல் நிலையங்களில் உள்ளன. அங்குள்ள மாணவர்களும் ஆசிரியர்களும் தோழமை உறவுடன் பழகுகிறார்கள். அவர்களிடையே பகைமை உணர்ச்சியே கிடையாது."

—இவ்வாறு, இங்கிலாந்து சென்று திரும்பியுள்ள டாக்டர் அ. சிதம்பரநாதனார் அவர்கள், சென்னை தொண்டைமண்டல துளுவ வேளாளர் பள்ளியில் சென்னை தமிழாசிரியர் கழகச் சார்பில் மயிலை சிவமுத்து தலைமையில் தனக்களிக்கப்பட்ட வரவேற்புக்குப் பதிலளிக்குமுகத்தான் தமது இங்கிலாந்து அனுபவம் குறித்துப் பேசுகையில் குறிப்பிட்டார்.

"இங்கிலாந்து மக்கள் அனைவரும் 'பால்' உணர்ச்சி இல்லாமல் ஒருவருக்கொருவர் பழகுகின்றனர்," என்றும் அவர் குறிப்பிட்டார்.

இங்கிலாந்திலுள்ள பல்கலைக் கழகங்களில் தமிழ் மொழியின் நிலைபற்றிப் பேசுகையில், இலண்டன் பல்கலைக் கழகம் ஒன்றில்தான் தமிழ் மொழியை வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும், மற்றும் ஆக்ஸ்போர்டு, கேம்பிரிட்ஜ் ஆகிய பல்கலைக் கழகங்கள் தவிர ஏனையவற்றில் தமிழ் மொழி இடம் பெறவில்லையென்றும், அங்கு திருக்குறள், தொல்காப்பியம், பெரிய புராணம் போன்ற நூல்கள் இருப்பதாகவும் கூறினார்.

அண்ணாதுரை அவர்கள் வருகை

மாநில மாநாட்டுப் பொருளாளர் தோழர் சி. என். அண்ணாதுரை அவர்களிடம், தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு நிதி வசூலாகியுள்ள தொகையைப் பொதுக்கூட்டத்தில் கொடுக்க விரும்புவதாயும், தங்கள் மாவட்டத்தில் உடனடியாக சுற்றுப்பிரயாணம் செய்ய தேதி தரும்படியும் கடிதம் எழுதியிருக்கிறார்கள் ; மிகவும் மகிழ்ச்சி.

ஒவ்வோரு மாவட்டத்திலும் அன்புடன் வாக்களித்தபடி நிதி வசூல் செய்திருக்கும் தொகையை உடனே பொதுச் செயலாளர் அவர்கள் முகவரிக்கு அனுப்பி வைத்து தோழர்கள் கடிதம் எழுதினால், ஒவ்வொரு மாவட்டத்திற்கும் நான்கு நாட்களுக்கு சுற்றுப் பிரயாண நிகழ்ச்சித் திட்டங்கள் ஏற்படுத்தி வெளியிடப்படும்.

தனித்தனி ஊர்கட்கு தோழர்கள் அழைப்புகள் அனுப்பாமல், தங்கள் மாவட்ட செயலாளருடன் கலந்து பேசி பொதுக்கூட்ட ஏற்பாடுகளைச் செய்க—மாவட்டச் செயலாளர் அவர்கள் மூலம் இங்கு செய்தி அனுப்ப வேண்டுகின்றோம்.

ஜூலை மாதம் சுற்றுப்பிரயாண நிகழ்ச்சிகள் ஆரம்பமாகலாம்.

அடுத்த பொதுத் தேர்தல்

இந்திய சர்க்கார் நிலை

மாநில புனரமைப்புக் குழு ஏதேனும் பெரிய அளவில் மாநிலச் சீர்திருத்தங்களைச் சிபாரிசு செய்து அவற்றை இந்திய சர்க்கார் ஏற்குமானால் புது மாநிலங்கள் அமைப்புக்கான சட்டங்கள் இயற்ற சிறிது அவகாசம் தேவைப்படும்.

புது மாநிலங்கள் கண்டபிறகுதான் தேர்தல் நடத்துவது என்று கூறினால், இப்போது, 1957-ல் நடத்தப்படவேண்டிய பொதுத் தேர்தல் ஒத்திப்போடப்படவேண்டியதாயிருக்கும். ஆனால் பொதுத் தேர்தல்கள், அரசியல் சட்டம் திருத்தப்பட்டால் ஒழிய ஒத்திப் போடப்படமுடியாது.

1957 ஜனவரியில் தேர்தலை நடத்துமாறு, பிரதம தேர்தல் கமிஷனரான சுகுமார் சென் இந்தியப் பேரரசிற்கு சிபாரிசு செய்திருக்கிறார்.

இந்திய சர்க்கார், தேர்தல் பற்றிய இறுதி முடிவுகளை இன்னும் மேற்கொள்ளவில்லை என்று தெரிகிறது.

மாநில புனரமைப்புக் குழு வரும் செப்டம்பர் 30-ல் தனது சிபாரிசுகளை அறிவித்த பின்னரே முடிவுகளைத் தெரிவிப்பர் என்றும் கூறப்படுகிறது.

தஞ்சை மாவட்டத்தில் அண்ணா

பட்டுக்கோட்டை நகராட்சி மன்ற வரவேற்பு— திரு. வி. க. படத் திறப்பு

பொதுக்கூட்டங்களில் மாநில மாநாட்டு நிதியளிப்பு

21—6—55 செவ்வாய்க்கிழமையன்று மாலை 5-30 மணியளவில் பட்டுக்கோட்டை ஊராட்சி மன்றத்தினர் மாபெரும் வரவேற்பு ஒன்று ஊராட்சி மன்ற அலுவலகத்தில் அண்ணா அவர்களுக்கு அளித்தனர்.

ஊராட்சி மன்றத் தலைவர் தோழர் சாமுவேல் அவர்கள் அண்ணா அவர்களுக்கு மாலை சூட்டி வரவேற்றார்.

மன்ற அலுவலகத்தில் ஒரு தேநீர் விருந்து நடைபெற்றது. நகர பிரமுகர்கள் பலரும், மன்ற உறுப்பினர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

திரு வி. க. அவர்களின் படத்தைத் திறந்துவைக்க வேண்டுமென்று மன்றத் தலைவர் தோழர் சாமுவேல் அவர்கள் கேட்டுக் கொண்டதற்கு இணங்க, அண்ணா அவர்கள், திரு வி. க. படத்தைத் திறந்துவைத்து அரியதோர் உரை நிகழ்த்தினார்.

மன்ற துணைத் தலைவர் வீராசாமி அவர்கள் நன்றி கூற விழா இனிதே முடிந்தது.

மன்ற அலுவலகம் மலர்களால் மிக சிறப்பான முறையில் அழகுபடுத்தப்பட்டிருந்தது. ஏராளமான மக்கள் குழுமியிருந்து நிகழ்ச்சிகளைக் கண்டு, கேட்டு இன்புற்றார்கள். நிர்வாக அதிகாரி சத்தியநாராயண அவர்களும் நிகழ்ச்சிகளில் பங்கேற்று சிறப்பித்தார்.

பொதுக் கூட்டம்

மாலை 7 மணியளவில் காசாங்குளம் வடகரையில் ஒரு மாபெரும் பொதுக்கூட்டம் நடைபெற்றது. நகர் சமீப காலத்தில் கண்டறியாத மாபெரும் மக்கள் கூட்டம் கூடியிருந்தது.

தோழர் அ. பொன்னம்பலனார் அவர்கள் தலைமை தாங்கி சிறிய கருத்துரை வழங்கினார்.

தோழர்கள் என்.எஸ்.இளங்கோ, மதியழகன் பேசிய பின், கூடியிருந்தோரின் மகிழ்ச்சிப் பேரொலிக்கிடையே அண்ணா அவர்கள் சொற்பொழிவாற்றினார்.

பல கழகங்கள் சார்பிலும், சங்கங்கள், வாசகசாலைகள் சார்பிலும் உள்ளூர் தி. மு. கழக செயலாளர் சீனுவாசன் அவர்களால் ரூ. 163-4-9 கொண்ட பண முடிப்பு ஒன்று மாநில மாநாட்டு நிதிக்காக வழங்கப்பட்டது.

மலர் மாலைகள் கைத்தறி ஆடைகள் ஏராளமாக அண்ணா முதலியோர்களுக்கு அணிவிக்கப்பட்டது.

நகர கழகப் பொருளாளர் சங்கரன், மாணிக்கம் ஆகியோரின் முயற்சியால் கூட்டம் சிறப்புற முடிந்தது.

★

அதிராம்பட்டினத்தில் பொதுக் கூட்டம்

இரவு 9½ மணியளவில் அதிராம்பட்டினம் பழஞ்செட்டி தெருவில் தி. மு. கழகத்தின் ஆதரவில் ஒரு மாபெரும் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

தோழர் இராதாகிருஷ்ணன் தலைமை வகித்தார்.

தோழர்கள் என். எஸ். இளங்கோ, பொன்னம்பலனார், மதியழகன் ஆகியோர் பேசியபின், அண்ணா அவர்கள் சீரியதோர் கருத்துரை வழங்கினார்.

கிளைச் செயலாளர் சீனுவாசன் அவர்களால் ரூ. 125 கொண்ட பணமுடிப்பு அண்ணா அவர்களிடம் மாநில மாநாட்டு நிதிக்காக வழங்கப்பட்டது.

திருப்பதியில் மருத்துவக் கல்லூரி

ரூ. 50 லட்சம் தரப்படும்?

திருப்பதி, ஜூன் 21—

திருப்பதியில் ஒரு மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்கென ஆந்திர சர்க்காருக்கு ரூ. 50 லட்சம் தர திருமலை — திருப்பதி தேவஸ்தானபோர்டு முன்வந்திருக்கிறதாம்.

5 ஆண்டுகளில் அந்தத் தொகை தரப்படும் ; அதற்குப் பதிலாக, திருப்பதியில் உள்ள மருத்துவ மனையிலிருக்கும் படுக்கைகளின் எண்ணிக்கையை 500 ஆக உயர்த்தவேண்டும் என்று 'போர்டு' கோரியிருக்கிறதாம்.

மாநில மாநாட்டு வரவேற்புக் குழுக் கட்டணம்

சென்னையில் நடைபெற்ற பொதுக் குழு முடிவின்படி, திருச்சியில் நடைபெறவிருக்கும் தி. மு. கழக 2-வது மாநில மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் கட்டணம் ரூபாய் பத்தும் மே மாதம் 15-ந் தேதிக்குள் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொண்டபடி, பல தோழர்களிடமிருந்தும் இன்று வரையில் வந்து சேரவில்லை. இரண்டு முறை அறிவிப்புக் கார்டுகளும் அனுப்பியாயிற்று. இனி, மூன்றுவது முறையாக அறிவிப்புக் கார்டுகள் அனுப்பி வைக்கும் அவசியமில்லாதபடி., வரவேற்புக் குழு உறுப்பினர் கட்டணம் ரூபாய் பத்தும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் முகவரிக்கு M.O. மூலம் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

இராயபுரம், } —பொறுப்பாளர்,
சென்னை-13 } தி. மு. கழகம்,
23-6-55 } தலைமை நிலையம்

அடிப்படை நக சமுதாய நலத் திட்டமொன்றுக்கு (நகர்ப்புற திட்டப் பிரிவுகள் சேராதது) மூன்று ஆண்டு காலத்தில் சுமார் ரூ. 65 லட்சம் செலவாகுமென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது. இத்தொகையில் ரூ. 6·53 லட்சம், டாலர் செலவுக் கணக்கைச் சேர்ந்ததாகும்.

முகவரி மாற்றம்

சென்னை, அயன்புரம் கிளைக் கழகப் பணி மனை, "எண். 48, மேட்டுத் தெரு, அயன்புரம், சென்னை. 23" என்ற முகவரிக்கு மாற்றப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டிருக்கிறது.

நேரு-புல்கானின் கூட்டறிக்கை

இந்தியப் பிரதமர் நேருவும், சோவியத் பிரதமர் மார்ஷல் புல்கானினும் கையொப்பமிட்டு கூட்டறிக்கை ஒன்று வெளியிட்டிருக்கின்றனர்.

மாஸ்கோவிலும், புதுடில்லியிலும் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டுள்ள அந்த கூட்டறிக்கையில், இரு பிரதமர்களும் சகோதர மனப்பாங்குடன், இந்தியா—ரஷ்யா ஆகியவற்றைப் பொறுத்த விஷயங்களை மட்டுமன்னியில், சர்வதேச முக்கியத்துவம் வாய்ந்த விஷயங்கள் குறித்தும் வெளிப்படையாகப் பேசியதாகத் தெரிவித்திருப்பதுடன், ஐந்து அம்ச கூடிவாழும் கொள்கையில் தாங்கள் நம்பிக்கை கொண்டிருப்பதாயும் தெரிவித்திருக்கின்றனர்.

பாண்டுங் மாநாட்டு முடிவுகளை இரு பிரதமர்களும் வரவேற்பதாயும், பார்மோசா, சீனாவின் உரிமைக்குரியது என்று ஒப்புக்கொள்வதாயும், செஞ்சீனாவுக்கு ஐ. நா. சபையில் இடம் தரவேண்டும் எனக் கோரியிருப்பதாகவும் அறிக்கை கூறுகிறது.

அணு, ஆயுத உற்பத்தி சோதனை ஆகியவை அடியோடு தடுக்கப்பட வேண்டும் என்றும், ஆயுதக் குறைப்பை வலியுறுத்துகையில் குறிப்பிட்டிருக்கின்றனர்.

எல்லா நாடுகளும், ஐந்து அம்ச கூடி வாழும் கொள்கையைக் கடைப்பிடித்தால் உலகில் சமாதானம் வளர உதவ முடியும் என்றும் தெரிவித்திருக்கின்றனர்.

போலந்தில் நேரு

லண்டன், ஜூன் 23—

இந்தியப் பிரதமர் நேரு ரஷ்யாவில் கடந்த 15 நாட்களாக சுற்றுப் பயணம் செய்துவிட்டு, மாஸ்கோவிலிருந்து புறப்பட்டு, போலந்து நாட்டின் தலைநகரான வார்சா வந்து சேர்ந்தாராம்.

இந்தியாவில் அமெரிக்க முதலீடு

அதிகரிப்பது பற்றி யோசனை

இந்தியாவில் அமெரிக்கர்கள் அதிக விடுமுதல் செய்ய முதலீடு உத்திரவாத ஏற்பாடு அவசியம் என்று அமெரிக்கா யோசனை கூறியதற்கிணங்க, இந்திய சர்க்கார், 'முதலீடு உத்திரவாத திட்டம்' பற்றி ஆலோசனை செய்து வருவதாகத் தெரிய வருகிறது.

இந்த ஏற்பாடு, நாட்டின் நன்மைக்குத் தேவையானதென்றும், நஷ்டயீட்டிற்கு இலாயக்கானது என்றும், முதலீடு பெறும் நாட்டின் சர்க்காரால் அறிவிக்கப்படும் திட்டங்களுக்கு மட்டுமே பொருந்தக் கூடியதாகும் என்றும் அறிவிக்கப்படுகிறது.

நாட்டின் அபிவிருத்தியைத் துரிதப்படுத்த, சில குறிப்பிட்ட துறைகளுக்கு மட்டிலுமே அந்நிய மூலதனத்தை உபயோகிக்கலாம் என சர்க்கார் அதிகாரிகள் அடிக்கடி கூறிவந்துள்ளது ஈண்டு குறிப்பிடத்தக்கது.

ஒருவருக்கொருவர் நட்பு, வர்த்தகம், கப்பல் போக்குவரத்து ஆகிய துறைகள் சம்மந்தமாக இந்தியாவிற்கும் — அமெரிக்காவிற்குமிடையே ஏர்பட இருக்கும் ஒரு ஒப்பந்தத்திற்கும், இந்த உடன்பாட்டிற்கும் வேற்றுமைகள் உண்டென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்துக்கள் அல்லாதோர்!

திருமலை கோவிலில் நுழையக்கூடாதாம்!

திருப்பதி, ஜூன் 21—

இந்துக்கள் அல்லாதவர்கள், உல்லாச யாத்திரீகர்களாகவும், உத்தியோக வேலையாகவும், நிர்வாக அதிகாரியின் அனுமதியுடன் திருமலைக்குச் செல்லலாமென திருமலை திருப்பதி தேவஸ்தான 'டிரஸ்டிகள் போர்டு' தீர்மானித்திருக்கிறதாம். அது சம்மந்தமாக அதன் முந்திய தீர்மானத்தை 'போர்டு' பரிசீலனை செய்திருக்கிறது.

ஆனாலும், இந்துக்கள் அல்லாதவர்கள் கோவிலுக்குள் நுழையக்கூடாது எனவும், 3 நாட்களுக்கு மேல் மலைமீது இருக்கக்கூடாதெனவும், திருமலையில் வழக்கத்தில் உள்ள சம்பிரதாயங்களை அவர்கள் மதித்து நடந்து கொள்ளவேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டிருக்கிறதாம்.

புதுக்கோட்டையில் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரி

புதுக்கோட்டை, ஜூன் 22—

புதுக்கோட்டையில் பட்டதாரிகளுக்கு ஆசிரியர் பயிற்சி அளிக்கும் கல்லூரி ஒன்றை இந்த ஆண்டு ஜூலை முதல் துவங்குமாறு சர்க்காரிடமிருந்து உத்தரவு வந்துள்ளதாயும், இந்தக் கல்லூரி பிரகதாம்பாள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும் என்றும் தெரியவருகிறது.

இந்தக் கல்லூரி ஜூலை 1-ந் தேதி முதலே வேலை துவங்கும் என்றும், அதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

பசு பராமரிப்பு நிலையங்கள்

அபிவிருத்திக்கான திட்டங்கள்

ஐதராபாத், ஜூன் 22—

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டத்தின்கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட 500 பசு பராமரிப்பு நிலையங்களின் அபிவிருத்திக்கு பசுக்கள் பராமரிப்பு மத்தியக் குழு சில திட்டங்கள் தயாரித்துள்ளதாகத் தெரிகிறது.

இந்த நிலையங்கள் பற்றிய அறிக்கை ஒன்றின்படி, சுமார் 3,000 பசு பராமரிப்பு நிலையங்களில் 6 இலட்சத்திற்கும் மேற்பட்ட கால் நடைகள், வருடமொன்றுக்கு ரூ. 7 கோடி செலவில் பராமரிக்கப்பட்டு வருவதாகத் தெரிகிறது.

1954-ம் ஆண்டில், இந்தியாவின் தொழில் துறை உற்பத்தி அளவு, 1946-ம் ஆண்டில் இருந்ததைக் காட்டிலும் 46 சதவிகிதம் அதிகமாக இருந்தது.

பாகிஸ்தான் — இந்தியா தண்ணீர் விநியோகத் தகராறு

தற்காலிக உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகத் தகவல்

கராச்சி, ஜூன் 23—

தண்ணீர் விநியோகம் சம்மந்தமாக இந்தியா—பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஒரு தாற்காலிக உடன்பாடு ஏற்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

வாஷிங்டனில் உலக பாங்கி மூலம் நடைபெற்றுவரும் பேச்சு வார்த்தைகளினாலேயே இந்த உடன்பாடு ஏற்பட்டிருக்கிறதாம்.

'சாரிப்' பயிருக்கும், அடுத்த சாகுபடிக்கும் பாகிஸ்தான் விவசாயிகள் திருப்திகரமாக தண்ணீர் விநியோகம் பெறவேண்டும் என்பதற்காகவே இந்த உடன்பாடு மேற்கொள்ளப்பட்டதாம்.

எனவே, இது சிறிது காலத்திற்குத்தான் அமுலில் இருக்குமாம்.

இதற்கிடையில் கால்வாய் நீர்த் தகராறில் நிரந்தர பரிகாரம் காண தொடர்ந்து முயற்சி நடக்குமாம்.

கழகக் கூட்டங்கள்

★

வேலூர்

கோட்டை மைதானத்தில்
26—6—55 மாலை 6 மணிக்கு
தலைவர்: முல்லை-சத்தி
பேசுவோர் :
இரா. நெடுஞ்செழியன்
சி. பி. சிற்றரசு
ப. உ. சண்முகம்

* * *

அன்று காலை, பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களுக்கு நகரசபையில் வரவேற்பளிக்கப்படும்.

★

பெரியகுளம்

பெரியார் திடலில்
26—6—55 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
கி. மனோகரன்
எஸ். முத்து

★

பெண்ணாத்தூர்

25—6—55 சனி மாலை நடைபெறும். தோழர்கள் ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, வி. ஏ. பசுல், வி. எ. இளஞ்செழியன் ஆகியோர் பேசுவர்.

★

பறங்கிப்பேட்டை

26—6—55 மாலை 6 மணிக்கு, சஞ்சீவிராயர் கோவில் தெருவில் நடைபெறும். தோழர் மீ சு இளமுருகு பொற்செல்வி பேசுவார்.

★

திருவத்திபுரம்

27—6—55 மாலை, தோழர் சி. வெ. சுப்பராயன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் சி. பி சிற்றரசு, ஏ. எல். சி. கிருஷ்ணசாமி, வி. ஏ. இளஞ்செழியன், வி. ஏ பசுல், பாபு ஜனார்த்தனன் ஆகியோர் பேசுவர்.

★

குடியேற்றம்

27—6—55 மாலை 6 மணிக்கு குடியேற்றம் ஆற்றில் நடைபெறும். தோழர்கள் சிற்றுளி-சுப்பிரமணியம், ஆ. மணிஎழிலன் ஆகியோர் பேசுவர்.

சென்னை 11-வது வட்ட தி. மு. கழக உறுப்பினர்கட்கு

இதுகாறும், பவழக்காரத் தெருவிலிருக்கும், 'போர்வாள்' பணிமனையில் பணியாற்றிவந்த சென்னை 11-வது வட்ட தி.மு.க. கிளை இப்போது, 4/38-எ, பிராட்வேயிக்கு மாற்றப்பட்டிருக்கிறது. 25-6 55 மாலை 5 மணிக்கு, மேற்படி மாற்றப்பட்ட இடத்தில் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். தோழர் காஞ்சி மணிமொழியார் தலைமையில், தோழர் இளம்பரிதி கழகக் கொடியை ஏற்றிவைப்பார்

சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழு உறுப்பினர்கட்கு

26—6—55 காலை 9 மணிக்கு சென்னை 35-வது வட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது, இப்பொழுது இருக்கும் பொருளாளர் வேலையின் நிமித்தம் வெளியூர் செல்லவேண்டியிருப்பதால், அவருக்குப் பதிலாக வேறொருவரைத் தேர்ந்தெடுக்க வேண்டி ஆலோசிக்கப்படும்.

பள்ளிகளில் இடவசதி

சென்னை, ஜூன் 22—

"இடைநிலைக் கல்வி நிலையங்களில், இந்த ஆண்டு ஒவ்வொரு பிரிவிலும் 45 மாணவர்களை அனுமதிக்கலாம்,"

என்று, கல்வி இலாகா அதிகாரி உத்தரவு பிறப்பித்திருக்கிறார் எனத் தெரிகிறது

ஏற்கனவேயுள்ள உத்தரவுகளின்படி 40 மாணவர்களே ஒரு பிரிவிலிருக்கலாம்; இது, இப்போது 45 - ஆக உயர்த்தப்படுகிறது.

உலக பாங்கியிடமிருந்து கடன்!

நான்காம் முறையாக பாகிஸ்தான் பெறுகிறது!

மொத்தம் 5,82,50,000 டாலர்

வாஷிங்டன், ஜூன் 21—

பாகிஸ்தானில் மின்சார உற்பத்தி அபிவிருத்திக்காக, உலக பாங்கி மேலும் 1 கோடி 38 இலட்சம் டாலர் கடன் அளிப்பதாக அறிவித்துள்ளது.

கராச்சி மின்சார விநியோக கார்ப்பரேஷனுக்கு தரப்படும் இந்தக் கடன் தொகையைக்கொண்டு 30 ஆயிரம் கிலோவாட் மின்சாரம் உற்பத்தியாகும் புதிய நிலையம் ஒன்று துவங்கவும், ஏற்கனவே உள்ள நிலையங்களை அபிவிருத்தி செய்யவுமான வேலைகள் மேற்கொள்ளப்படும் என்றும் தெரிகிறது.

பாகிஸ்தானில் இந்தத் திட்டத்தினால் இப்போது உற்பத்தியாகும் மின்சாரத்தைப்போல் இருமடங்கு உற்பத்தி நடைபெறும் என்று தெரிகிறது.

இந்தக் கடன் 15 ஆண்டுத் தவணையில் தரப்படுவதாகவும் 4-5/8 சதவிகிதம் வட்டி வசூலிக்கப்படும் என்றும் கூறப்படுகிறது.

உலக பாங்கி, பாகிஸ்தானுக்கு இத்துடன் நான்காவது முறையாகக் கடன் வழங்கியுள்ளது; மொத்தம் இதுவரை பாகிஸ்தான், 5,82,50,000 டாலர் கடன் வாங்கியுள்ளது.

இதர கடன்கள் எல்லாம், இரயில்வே அபிவிருத்தி, விவசாய இயந்திர உற்பத்தி முதலியனவற்றிற்காகப் பெறப்பட்டனவாம்.

தற்காப்பு இலாகாவில் ஆட் குறைப்பு?

எதிர்த்துப் போராட தொழிலாளர் முடிவு?

புனா, ஜூன் 22—

"ஆட்குறைப்பு செய்யப்படுமானால் அதை எதிர்த்து போராடுவதற்கு தற்காப்பு இலாகா ஊழியர்கள் தயாராயிருக்க வேண்டும்,"

என்று, எல்லா தற்காப்பு இலாகா ஊழியர்களும் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்களாம்.

புனா, கிர்க்கி, பெரு ஆகிய இடங்களில் உள்ள தற்காப்பு இலாகா பிரிவுகளில் உள்ள தொழிலாளர்களுக்கான 13 தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் கூட்டத்தின் மூலமே இந்த எச்சரிக்கை தரப்பட்டிருப்பதாகத் தெரிகிறது

இரகசிய அணுசக்தி தொழிற்சாலை

வெடி விபத்து

நியூயார்க்கில் 'ஸார டோகா ஸ்பிரிங்ஸ்' என்ற இடத்திற்கு அருகே இரகசிய அணுசக்தி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்த தொழிற்சாலை ஒன்றில் ஒரு வெடி விபத்து ஏற்பட்டதின் விளைவாக பலர் காயமடைந்தனராம்; பலர் மருத்துவ மனைகளில் அனுமதிக்கப்பட்டனராம்; வேறு தகவல்கள் தர அதிகாரிகள் மறுத்து விட்டனராம்.

ஐ. நா. சபைக் கூட்டம்

"ஒவ்வொரு ஆண்டும் ஒவ்வொரு நாட்டில் கூட வேண்டும்"

"ஒவ்வொரு ஆண்டும் ஐ. நா. சபை ஒவ்வொரு நாட்டில் கூட வேண்டும்,"

என்று, ஐ. நா. சபையின் 10-வது ஆண்டு விழாவின்போது பாகிஸ்தானின் நிரந்தரப் பிரதிநிதி மகம்மது மீர்கான் தெரிவித்திருக்கிறார்.

தொழிலாளர்கள்

நீதிபதியைத் தாக்கினராம்!

ஜெய்பூர், ஜூன் 21—

பைலூரா நகரில் உள்ள மியரி நெசவாலை முன் வழிமறித்து நின்றுகொண்டு ஆர்ப்பாட்டம் செய்துகொண்டிருந்த தொழிலாளர் கூட்டத்தைக் கலைப்பதற்காக போலீஸ்பட்டாளத்துடன் சென்ற நகர நீதிபதி ஒருவரை கூட்டத்தினர் கையப்புடைத்துவிட்டனர் என்று இராஜஸ்தான் சர்க்கார் குறிப்பொன்று கூறுகிறது

சுயநல நோக்கங்கொண்ட சிலர், ஒரு தொழிலாளியை உண்ணாவிரதமிருக்கத் தூண்டியதாகவும், இதரரையும் 'தவறான வழி'யில் அழைத்துச் சென்றதாயும் அரசாங்கக் குறிப்பு குற்றஞ் சுமத்தியுள்ளது.

கடந்த நான்கு ஆண்டுகாலமாக அந்த ஆலை நிர்வாகிகளுக்கும்—தொழிலாளர்களுக்கும் இருந்து வரும் தகராறைத் தீர்த்துவைப்பதற்கென முதலாளி — தொழிலாளர் பிரதிநிதிகள், முதன் மந்திரி, தொழில் மந்திரி ஆகியோர் கலந்து கொள்ளும் மாநாடொன்று நடைபெறப் போவதையும் தொழிலாளர்கள் மறந்துவிட்டு இம்மாதிரி செயல்களில் ஈடுபட்டிருப்பதாக அரசாங்கம் குற்றம் சுமத்துகிறது.

ஷாங்காயில்....

தேசிய சீன ஒற்றர்கள் கைது

ஷாங்காயில் சுமார் 10 தேசிய சீன ஒற்றர்கள் கைது செய்யப்பட்டிருப்பதாகக் கூறப்படுகிறது.

கடந்த பிப்ரவரி மாதத்தில் அமெரிக்க கப்பல் படையின் உதவியுடன் சியாங் - கே - ஷேக் காலி செய்துவிட்டுப்போன 'டாச்சென்' தீவுகளிலிருந்து, சீனாவுக்குள் அந்த ஒற்றர்கள் புகுந்ததாகக் குறிப்பிடப்படுகிறது.

கைதானவர்களில் ஒருவரிடம் ஒரு செய்தி அனுப்பும் சாதனம், இரண்டு 'தூரதரிசினி'கள், ஒரு சிட்டிகை விஷம் இத்தனையும் இருந்ததாகவும், அவர்கள், ஹாங்காங்கில் உள்ள தேசிய சீன ஏஜெண்டுகளுக்கு வானொலி செய்திகள் அனுப்பிக்கொண்டிருந்ததாயும் அப்போதே அவர்கள் கைது செய்யப்பட்டு, விசாரணைக்காகக் காவலில் வைக்கப்பட்டிருப்பதாயும் கூறப்படுகிறது.

திருமணங்கள்

26—6—55 காலை 10 மணிக்கு, கருமாணிக்கம், (திருச்சிக்கு அருகில்) மணமகள் இல்லத்தில், தோழர் கே. ஏ. முருகேசன்—தோழியர் பட்டம்மாள் திருமணம் தோழர் ஏ. பி தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் எம். எஸ். மணி, ஜி பராங்குசம் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

26—6—55 காலை 8 மணிக்கு, மீஞ்சுருக்கு அடுத்த நந்தியம்பாக்கம் கிராமத்தில், தோழர் பி. துரைவேலு—தோழியர் வெள்ளியம்மாள் திருமணம், தோழர் கே. ஏகாம்பரம் தலைமையில் நடைபெறும். தோழர்கள் ஆ. கிருஷ்ணன், மு. குணசீலன், இராதாமணாளன், ஜே எஸ். வாசன், எஸ். ஏ. சேரலாதன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

* * *

27—6—55 ஞாயிறு காலை 9 மணிக்கு, குடியேற்றம், புவனேச்வரிப்பேட்டை, குமரன் தெருவில், ஜி. பி. மாணிக்கம் பந்தலில், தோழர் எஸ். வேலுசாமி—தோழியர் கிருட்டிணவேணி திருமணம் நடைபெறும். தோழர்கள் சிற்றுளி சுப்பிரமணியம், மணி எழிலன் ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன், எம். ஏ.